**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 1/2024**
**Prosecution Witness - PW1**

| | | |
|---|---|---|
| Name | : | Mr.Subash |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.08.2026.
(Accused absent. Petition filed and allowed)

மனுவின் பேரில் குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். புகாரில் எதிரிகள் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அடையாளம் தெரிந்த நபர் என்றுதான் சொல்லியிருந்தேன். புகாரில் இருசக்கர வாகனத்தின் பதிவு எண் குறிப்பிட வில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். சம்பவம் இரவு நேரம் என்றால் ஆமாம். நான்தான் அந்த பேருந்தை ஓட்டினேன் என்றால் ஆமாம். வண்டி போய் கொண்டிருக்கும் போது கல்லை வைத்து கண்ணாடியில் அடித்தார்கள் என்றால் பேருந்து போய் கொண்டிருக்கும் போது எதிரே இருசக்கர வாகத்தில் வந்து குறுக்கே நிறுத்தி கருங்கல்லால் பேருந்தின் முன்பக்க கண்ணாடியை உடைத்தார்கள். இந்த வழக்கில் எதிரிகளை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ச்ம்பவம் என் முன்பாக நடந்ததால் அடையாளம் தெரியும். ஒரு எதிரி தலக்குளத்தை சார்ந்தவர் என்றும் மற்றொரு எதிரி மாங்குடியை சார்ந்தவர் என்றும் எனக்கு தெரியும் என்றால் சம்பவம் நடந்த பின் அந்த இடத்தில் இருந்தவர்கள் சொல்லிதான் தெரியும். இருசக்கர வாகனத்தில் யார் ஓட்டியது யார் பின்னாடி இருந்தது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் அந்த நபர்களை பார்த்தால் சொல்ல முடியும். எதிரிகளை பார்த்தால் சொல்வேன் என்பது

வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரிகள் தலக்குளம் மற்றும் மாங்குடியை சார்ந்தவர்கள் அல்ல என்றால் பக்கத்தில் உள்ளவர்கள் சொல்லி தான் தெரியும். எதிரிகள் வி்லுகுறியை சார்ந்தவர்கள் என்றாலும் அவர்களுக்கும் இந்த வழக்கிற்கும் ச்ம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. போலீஸ் கேட்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**